1984 மார்ச் 21]

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ), கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியம் இதுவரையில் அமைக்கப் படவில்லை. வருவாய் கிராமங்கள் அமைக்கும் பணி நடை பெற்று வருகின்றது. இப்பணிகள் முற்றுப்பெற்றதும் ஊராட்சிகள்/ ஊராட்சி ஒன்றியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுயவேலை வாய்ப்புப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

375—(*வினா 18016)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயவேலைவாய்ப்புப் பயிற்சிக்கு உதவித்தொகை வழங்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அந்த உதவித்தொகை உயர்த்தப் படுமா ?

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையில் பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊரிலேயே பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 50 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 100 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டு அந்தப் பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி செய்யப்படாதிருந்தால் மாதம் ரூ. 125 என்றும், 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பின் பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊரிலேயே பயிற்சி நடத்தப் பட்டால் மாதம் ரூ. 75 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டு அந்த பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி இருந்தால் மாதம் ரூ. 150 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டுத் அந்தப் பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி செய்யப் படாதிருந்தால் மாதம் ரூ. 200 என்றும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுயவேலை வாய்ப்பு பயிற்சி மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது? மேலும் எந்த அடிப்படையில் அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சுயவேலைத் திட்டம் என்பது ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் செய்யப்படுகிற திட்டம், இதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஒன்றியத்தில் 600 குடும்பங்கள் அவர்கள் முன்னுக்கு வருவதற்கு, அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இந்தத் திட்டம் உதவிகரமாக இருந்து வருகிறது. அதேபோல் தமிழகம் முழுவதும் 1 லட்சத்து 26 ஆயிரத்து 800 குடும்பங்கள் பயன்படுகிற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 90 கோடி ரூபாய் செலவழிக்கும் திட்டமாக ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் நடந்து வருகிறது இந்தத் திட்டத்தின் மூலமாக சிறிதளவு படித்தவர்கள் கூட உதவியை பெறமுடியும். அப்படித்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிக்காக அளிக்கப்படுகிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகஸ்ட் மாதம் முதல் உயர்த்தப்பட்டிருந்தாலும் அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அரசு இதை மேலும் உயர்த்துவதற்கு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னாலே உயர்த்தப்பட்டு கொடுக்கப்படும் தொகையை நான் ஏற்கனவே சொன்னேன். அந்தத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற வேண்டும். ஏனென்றால் இது அனைத்து மாநிலங்களிலும் செயல்படுகிற மத்திய அரசினுடைய திட்டம். ஆனால் பயிற்சிக்காலத்திலே கொடுக்கப்படுகிற தொகை மாநில அரசும், மத்திய அரசும் 50 சதவீதம் 50 சதவீதம் என்ற முறையில் கொடுத்து நடைபெற்று வருகிற திட்டமாக இந்தத் திட்டம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்